OS .No. 12/2022 நாள் : 06.04.2026

<u>PW1 ரகுராமன் என்கிற ரகுநாதன்</u>

<u>குறுக்கு விசாரணை</u>

நான் பதிவுப்பெற்ற ஒப்பந்தக்காரரிடம் சப் கான்டிராக்டராக வேலை செய்து வருகிறேன். வரவு செலவு கணக்குகள் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வேலையை செய்து வருகிறேன். சம்பளப்பட்டுவாடா போன்ற அனைத்து வரவு செலவு கணக்குகளில் வரும் என்றால் சரிதான். அது தவிர வேறு எந்த கணக்கும் பராமரித்து வரவில்லை என்றால் என் சொந்த வரவு செலவுகளையும் பராமரித்து வருகிறேன். பிரதிவாதிக்கு நான் ரூ.5,00,000/−ம் 01.09.2020ல் கொடுத்தேன். அந்த விவரத்தை நான் சொந்த வரவு செலவு கணக்கில் எழுதியுள்ளேன். நான் பிரதிவாதிக்கு ரூ.5,00,000/−ம் பணம் கொடுத்ததற்கு வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை தவிர வேறு ஆவணம் இல்லை. 01.09.2020 தேதியில் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், எனக்கு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள 1வது சாட்சி பிரதிவாதியின் கணவர் விஸ்வநாதன் என்றால் சரிதான். மற்றொரு சாட்சி எனது நண்பர் பழனிவேலன் என்றால் சரிதான். புரோநோட்டின் அடிப்படையில் பழனிவேலனும் 3ம் நபர்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் உள்ளது என்றும், அந்த வழக்கில் நான் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. பழனிவேலன் என்பவர் பிரதிவாதியின் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான்.

பழனிவேலன் ஊராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட்டாரா என்றால் அந்த தகவல் பற்றி எனக்கு தெரியாது. 27.05.2016ல் பிரதிவாதிக்கும், 26.03.2016 தேதியில் விஸ்வநாதனுக்கும் பழனிவேலன் சாட்சியாக இருந்து வலிவலம் கிராமத்தில் நிலங்கள் வாங்கி கொடுத்துள்ளது பற்றி தெரியுமா என்றால் வாங்கியிருக்கலாம். 27.05.2016 தேதியிட்ட வா.சா.ஆ.5ஐ இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் உள்ள கையெழுத்துக்களை பார்த்து வா.சா.ஆ.1 ஆவணத்தை போர்ஜரியாக நானும், மற்றொரு சாட்சியான பழனிவேலனும் சேர்ந்து தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பழனிவேலன் ஊராட்சி தேர்தலில் போட்டியிட்டபோது பிரதிவாதி குடும்பத்தார் அவருக்கு ஒத்துழைப்பு கொடுக்காததால் பழனிவேலன் நான் எப்படியும் உன்னிடமிருந்து நான் செலவழித்த பணத்தை வாங்காமல் விடமாட்டேன் என்று கூறி அதற்கு ஆதரவாக என்னுடன் சேர்ந்து வா.சா.ஆ.1 புரோநோட்டை போர்ஜரியாக தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது சாட்சியான பிரதிவாதியின் கணவர் வா.சா.ஆ.1 ஏற்பட்ட தேதியில் ஊரில் இல்லை என்றும், சென்னையில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் சென்னை வயலூரில் PMAC என்ற தனியார் நிறுவனத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குறிப்பாக 01.09.2020 தேதியில் விஸ்வநாதன் அந்த கம்பெனியில்தான் வேலை பார்த்தார் என்றும், ஊரில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2021 ஜீன் வரை வட்டிப்பணம் பிரதிவாதி எனக்கு பணம் கொடுத்ததற்கான ஆவணம் என்னிடம் இல்லை, அது பிரதிவாதியிடம்தான் இருக்கும்.

அவ்வாறு பிரதிவாதி எனக்கு வட்டிப்பணம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வங்கியில் இருந்து ரூ.5,00,000/-ஐ எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை என் கையிருப்பில் இருந்த பணத்தைதான் கொடுத்தேன். வழக்கிற்காக நான் கையில் இருந்த பணத்தை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் உள்ளது பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவரின் கையெழுத்து இல்லை என்று நிபுணர் ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணையில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் பிரதிவாதி தற்போது வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது காலியிடமாக இல்லை என்றும், வீடு இருக்கிறது என்றும் சொன்னால் ஆவணத்தின் அடிப்படையில் பற்றுகைக்காக மனு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 08.11.2021 தேதியில் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதிதரப்பில் 11.11.2021 தேதியில் வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பில் மேற்சொன்ன சங்கதிகளை தெரிவித்து வா.சா..ஆ.1. புரோநோட்டு ஜெராக்ஸ் கேட்டுள்ளார் என்றால் நான் கொடுக்கவில்லை. வழக்கில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வேண்டும் என்றால் பிரதிவாதி எடுத்துப்பார்த்துக்கொள்ளலாம். நான் பெரிய அளவில் தொழில் செய்து வருகிறேன் என்றும், வருமான வரி கட்டுவதில்லை என்றும் சொன்னால் வருமானவரி செலுத்தும் அளவிற்கு எனக்கு வருமானம் வரவில்லை.

எந்த பண பரிமாற்றமும் காசோலை மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ பரிமாற்றம் செய்யவேண்டும் என்று எனக்கு தெரியும். பிரதிவாதிக்கு நான் கொடுத்த ரூ.5,00,000/–ம் வங்கி மூலம் கொடுக்கவில்லை, ரொக்கமாக கொடுத்தேன். அதுபோல் நான் பிரதிவாதிக்கு ரூ.5,00,000/–ஐ ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ஐ பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அதை நான் மோசடியாக தயாரித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.